பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 12 சனிக்கிழமை 25.01.2025 கதிர் 078

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி மற்றும் ரெலோ மூலமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூ-ட்டணி ஆகியவற்றுடன் புதிய அரசமைப்புக்கான தமிமர் வரைவு குறித்துப் பேசுவதற்கு 2

## “பழிவாங்கலை நிறுத்து”

# பல்கலை மாணவர் போராட்டத்துக்கு ஊழியர் சங்கமும் ஆதரவு தெரிவிப்பு

மாணவர்கள் மீதான பழிவாங்குதல்களை உடன் நிறுத்த வலியுறுத்தி, நான்கு அம்சக் கோரிக்கைகளை உள்ளடக்கி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுத் தொடங்கிய காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்கலைக்கழக மாணவர்களே நாளைய எமது சமுதாயத்தின் தூண்கள். பல்கலைக் கழகங்கள் எமது சமுதாயத்தின் நீண்ட கால வளர்ச்சியினை நோக்காகக் கொண்டு செயற்படவேண்டும். இருப்பினும் அண்மைக் காலங்களில் சமூகத்திற்கு அர்ப்பணிப்புமிக்கவர்களாகவும், வினைத்திறன் உள்ளவர்களாகவும் மாணவர்களை வலுப்படுத்துவதில் பல்கலைக் கழகங்கள் பின் தங்கிவிட்டதாக எமது சமுதாயத்தில் கருத்து நிலவி வருகின்றது.

எமது பல்கலைக்கழகம் எப்பொழுதும் மாணவர்கள் நலன் சார்ந்தே தனது தீர்மானங்களை எடுத்து வருகின்றது என்பது வரலாறு. இனியும் அது தொடர வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஜனவரி 24 முதல் 2

# தேர்தலில் ஆளும்தரப்புக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவர்

## திலும் அமுனுகம தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் ஆளும்தரப்புக்குப் பாடம் புகட்டுவார்கள் என்று சர்வஜன சக்தியின் தேசிய அமைப்பாளர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நடைபெற்ற தொழில் முயற்சியாளர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொய்யை மாத்திரம் பிரதான கொள்கையாக வைத்து ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. தேர்தல் காலத்தில் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத உலகில் இல்லாத பல 7

## வரலாற்றில் முதல் முறையாக நாடாளுமன்றத்தில் பொங்கல்

தைப்பொங்கல் தினத்தை கொண்டாடும் வகையில் இலங்கை நாடாளுமன்ற வளாகத்தில் தைப்பொங்கல் நேற்று வைபவ ரீதியாக சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் இடம்பெற்றது.

வரலாற்றில் முதன் முறையாக இலங்கை நாடாளுமன்றத்தினால் கொண்டாடப்பட்ட தைப்பொங்கல் தினமாக இது கருதப்படுகிறது.

இந்த நிகழ்வில் இந்துக் மதத் தலைவர்கள், குழுக்களின் பிரதித் 2

# அமைச்சர்களுக்கு ‘கால்கட்டு’

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான வாகனங்கள், எரிபொருள், தொலைபேசி மற்றும் ஏனைய சலுகைகள் தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் குமாரநாயக்கவினால் விசேட சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் அமைச்சின் செயலாளர்கள் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான வரையறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் தமது அரச கடமைகளுக்காக ஆகக் கூடியது இரு உத்தியோகபூர்வ வாகனங்களை மாத்திரமே பயன்படுத்த முடியும். அந்த வாகனங்களுக்காக மாதாந்தம் 900 லீற்றர் எரிபொருள் ஒதுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு இரு அலுவலக தொலைபேசிகள், ஒரு வீடு, ஒரு கையடக்க தொலைபேசி மற்றும் ஒரு தொலைநகல் இயந்திரம் என்பவை மாத்திரமே ஆளும்தரப்பின் செலவில் வழங்கப்படும்.

அதற்கமைய அலுவலக 2

## கொலையுண்ட ஊடகர்களுக்கு நீதியைப் பெற்றுத் தாருங்கள்

### கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி பெற்றுத் தருமாறு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகர்தராஜனின் 19 ஆவது ஆண்டு நினைவு தினம் 8

## உள்ளாட்சித் தேர்தல் சட்ட திருத்தத்தை எதிர்த்து உயர் நீதிமன்றில் 4 மனுக்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) தொடர்பான சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் பிரதிகள் தனக்கு கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் சபாநாயகர் ஜனத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

அவர் நேற்று இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 121 ஆம் உறுப்புரையின் (1) பிரிவின் பிரகாரம், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்த உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2 அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் பிரதிகள் 2025.01.23 ஆம் திகதியன்று கிடைக்கப்பெற்றது.

இவ்விருமனுக்களுக்கு 7

## வடக்கு மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய குழு நியமனம்

### ரவிகரன் எம்.பி. தகவல்

வடபகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து, அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குழுவொன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட



நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தகவல் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று வடமாகாண எதிர்க்கட்சியினர் உள்ளிட்ட பதினொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடமாகாண கடற்றொழிலாளர் இணைய பிரதிநிதிகளுக்கும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலிலேயே இவ்வாறு குழு ஒன்றை அமைப்பதென்ற 2

## மகிந்தவை வெளியேறச் சொல்லி உத்தியோகபூர்வ அறிவிப்பில்லை

### பொதுஜன பெரமுன செயலர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்று மேடைகளிலும் பொது இடங்களிலும் மாத்திரம் குறிப்பிடப்படுகிறது. இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு ஏதும் கிடைக்கவில்லை. அவ்வாறு உத்தியோகபூர்வ அறிவிப்பு கிடைத்தால்



மறுகணமே மகிந்த ராஜபக்ச விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறுவார். ஒரு 7

## மகிந்தவின் பாதுகாப்பு விடயத்தில் புலனாய்வு அறிக்கை புறக்கணிப்பு

### இப்படிப் புலம்புகிறார் சட்டத்தரணி கமகே

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு உயிரச்சுறுத்தல் காணப்படுகிறது என்று புலனாய்வுப் பிரிவு முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் மற்றும் சலுகை தொடர்பில் ஆராய்ந்து குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தபோதும் அதனை கருத்திற்கொள்ளாது அவருக்கு வழங்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டு, பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு இதற்கு நிச்சயம் 7

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்று நாள் குறித்திருந்தது. ஆனால் அந்தக் கூட்டம் இன்று நடைபெறாது என்று தெரிகின்றது.

இன்றைய சந்திப்புக்கு ஜனவரி 19 நடந்த தனது மத்திய குழுக் கூட்டத்திலேயே தமிழ் அரசுக் கட்சி முதல் ஆப்பைச் சொருகிவிட்டது என்பதை எனது பத்தியில் மறுநாளே கூறியிருந்தேன். அதனை இங்கே மீண்டும் ஞாபகப்படுத்தலாம் என்று நினைக்கின்றேன்.

"தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு அரசமைப்புத் தொடர்பான முயற்சிகளைக் கையாள 7 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவில் முக்கியமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்வாங்கப்பட்டுள்ளார். கட்சித் தலைவர் சிவஞானம், கட்சியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன் மற்றும் சாணக்கியன் ஆகியோரும் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர கிழக்கிலிருந்து துரைராஜசிங்கமும் வடக்கிலிருந்து சயந்தனும் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இனிவரும் காலங்களில் இந்தக் குழுதான் அரசமைப்புத் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில் ஜனவரி 25 கஜேந்திரகுமார் கூட்டிய கூட்டத்திற்குச்செல்வதாயின்இந்தக்குழுவினரே செல்லவேண்டும். ஆனால், ஜன. 25 கூட்டம் குறித்து தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில் எதுவும் ஆராயப்படவில்லை. கஜேந்திரகுமாரின் அழைப்புக் குறித்து கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டபோதும், அவரது கடந்த காலச் செயற்பாடுகளின் அடிப்படையில்அதற்குஆதரவானகருத்துக்கள் கிடைக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சியைத் துரோகியாகக் காட்டுவதில்தான் அவர் முனைப்போடு இருப்பார் என்ற விடயம் அங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் ஜனவரி 25 கூட்டத்தில் இந்தக் குழுவினர் பங்கேற்பதற்கான சாத்தியங்கள் இல்லை.

அதுவும்போக, இந்த எழுவர் குழுவில் சிறீதரன்தவிரமற்றைய6பேரும்ஓரணியாகக் கூடியவர்கள் அதாவது ஒத்த கருத்துச் சிந்தனைப் போக்குடையவர்கள். எனவே சிறீதரன் - கஜேந்திரகுமார் இணையின் போக்குக்கு இவர்கள் இழுபடுவதற்கான சாத்தியங்கள் பெரிதுமில்லை. அதுவும்போக, தமிழ் அரசுக் கட்சி ஏற்கனவே ரணில் காலத்தில் ஒரு புதிய அரசமைப்பு வரைவை உருவாக்குவதில் பங்கேற்று அதற்கு ஆதரவும் தெரிவித்திருக்கும் நிலையில், ரெலோ மற்றும் புளொட் ஆகியன அந்த அரசமைப்பு வரைவுக்கு இணக்கம் தெரிவித்திருந்த நிலையிலும் இப்போது அந்த வரைபை முற்றாக நிராகரிப்பதன் நியாயம் குறித்தும், ஏக்கிய ராஜ்ஜியம் உட்பட இப்போது மீண்டும் கிளறப்படும் விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே கட்சியால் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளமை குறித்தும் கூட்டத்தில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவரால் நியமிக்கப்பட்ட அரசமைப்பு வரைவு தயாரிப்புக் குழுவிடம் தமிழ் அரசுக் கட்சி முன்வைத்த வரைவில் காலத்தேவைக்குஏற்பவல்லுநர்களுடன்கூடிப் பேசி தேவையான திருத்தங்களைச் செய்து, அவற்றின் அடிப்படையில் முன்னேற முடியும் என்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே இதற்கென 7 பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.

அதன் அர்த்தம் என்னவென்றால், கஜேந்திரகுமார் கூறுவதைப் போன்று தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு வரைபை முன்னிறுத்தி புதிய அரசமைப்பு முயற்சிகளை எதிர்கொள்வதற்கு தமிழ் அரசுக் கட்சி தயாராக இல்லை என்பதுதான். மக்கள் ஆணை தம்மிடமே இருக்கும் நிலையில் தமது அரசமைப்பு வரைவுக்கு ஆதரவாகச்செயற்படுவதாக இருந்தால், அந்த விடயத்தில் தமிழ் அரசோடு ஏனையவர்கள் இணைந்து வருவதாக இருந்தால் மட்டும் சேர்ந்து செல்வதற்குத் தமிழ் அரசு தயார் என்பதுதான்.

ஒருவேளை இந்தக் கூட்டத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் செல்லக்கூடும். ஆனால், இனி இது விடயத்தில் அவரால் கட்சிக்குள் செல்வாக்குச் செலுத்த முடியும் என்று நான் நம்பவில்லை. இப்போதைக்கு அவர் தறிகெட்டு ஓடிவிடாமலிருக்க அவருக்குக் கடிவாளம் இடும் இடத்தில் கட்சிதான் இருக்கிறதே தவிர, அவரது விருப்புக்கு கட்சியை வளைக்கும் வல்லமையுடன் அவர் இல்லை என்பது மட்டும் திண்ணம்" என்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது சிறீதரனும் அந்தக் கூட்டத்திற்குச் செல்லவில்லை. அதனால் அந்தக் கூட்டம் நடக்காது. அதற்குப் பதிலாக யாழ். நகரில் உள்ள சொகுசு விடுதியில் ஊடகவியலாளர்களுக்குச் சாப்பாடும் போட்டு தமது முயற்சி பற்றிப் போதித்து அவர்களின் ஆதரவைத் திரட்டி, அதன் மூலம் தமிழ் அரசுக்கு அழுத்தம் தரமுடியுமா என்ற முயற்சியில் முன்னணி இறங்கவுள்ளது. தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு வரைவு குறித்து ஊடகவியலாளர்களின் கருத்துக்களை அறிதல் என்ற பெயரில் இந்தச் சந்திப்புக்கு இன்று திட்டமிடப்பட்டிருக்கின்றது. ''நக்குண்டார் நாவிழந்தார்'' என்பது ஊடகவியலாளர் விடயத்தில் பயன்தரக்கூடிய முயற்சியல்ல என்பது எனது தனிப்பட்ட கருத்து. யாரிடம் வேண்டுமானாலும் சாப்பிட்டுவிட்டு அவர்களையே சகட்டு மேனிக்கு விமர்சிப்பது அவர்களுக்குக் கைவந்த கலை. என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்.

இன்றைய கூட்டம் பிசுபிசுத்தாலும் ரெலோ மூலமாகச் சென்று கஜேந்திரகுமாருடன் பேசத் தயாராக இருக்கும் முன்னாள் ஆயுதக் குழுக்களுடன் - முன்னணியின் மொழியில் சொன்னால், ஒட்டுக் குழுக்கள், ஆளும்தரப்பின் அடிவருடிகளுடன் - அடுத்த ஓரிரு தினங்களில் அவர் சந்தித்துப் பேசக்கூடும் என்று கூறப்படுகின்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக அவர்கள் இந்தப் பேச்சில் பங்கேற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதால் அவர்களுடனான சந்திப்பு நடக்கலாம். முன்னாள் துரோகிகளும் இன்னாள் தூயவர்களும் சந்தித்து எத்தகைய ஒரு இணக்கப்பாட்டுக்கு வருகின்றார்கள் என்று.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அமைச்சர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வீட்டு தொலைபேசிக்காக 20,000 ரூபா அதிகபட்ச கொடுப்பனவும், கையடக்க தொலைபேசிக்காக அதிபட்சம் 10,000 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படும்.

அதேபோன்று கொள்கைத்திட்டமிடலுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சுயாதீனமாக ஆலோசகர் ஒருவரை அல்லது குழுவொன்றை நியமித்துக் கொள்ள முடியும்.

அவர்கள் குறித்த விடயத்தில் நிபுணத்துவமும் அனுபவமும் உடையவர்களாக இருக்கவேண்டும். இவ்வாறான எந்தவொரு பதவிக்கும் அமைச்சர்கள் அல்லது பிரதி அமைச்சர்கள் தமது உறவினர்களை நியமிக்க முடியாது.

அமைச்சு ஆலோசகர்களுக்கான கொடுப்பனவுகள் அவர்களது தகைமைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும். அத்தோடு அவை பொதுநிர்வாக சுற்றறிக்கைக்கு அமையவே தீர்மானிக்கப்படும்.

அமைச்சர்கள் தமது அலுவலகப் பணிகளுக்காக செயலாளர்கள் உட்பட 15 உத்தியோகத்தர்களையும், பிரதி அமைச்சர்கள் 12 உத்தியோகத்தர்களையும் நியமிக்க முடியும்.

இந்த வரையறைகள் ஜனவரி 6 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரலாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிசாளர் ஹேமாலி வீரசேகர, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரின் முன்மொழிவுக்கு அமைய, சபாநாயகரின் ஆலோசனையின் கீழ், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் இந்து மத மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் இந்த வைபவம் இடம்பெற்றது.

# தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு எதிரான மனுக்கள் மீது விசாரணை ஆரம்பம்

ஆளும்தரப்பால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

இந்த மனு மீதான விசாரணை, யசந்த கோதாகொட, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நடைபெற்றது.

மனுதாரரின் சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்கள் நேற்று முடிவடைந்த நிலையில், மேலதிக விசாரணை அடுத்த திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அன்றைய தினம் மனுக்கள் தொடர்பான வாதங்களை சட்டமா அதிபரும் முன்வைக்க உள்ளார்.

இந்த மனுக்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நிஷாம் காரியப்பர் உள்ளிட்ட குழுவினர் தாக்கல் செய்திருந்தனர்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ரத்து செய்து புதிய வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்பிற்கு முரணானவை என்றும், அவை நிறைவேற்றப்பட வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கக் கோரி இந்த மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

---

உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தமிழ்கலாசாரம்பற்றியபுரிதலைஊக்குவித்தல், தமிழ் சமூகத்தின் பாரம்பரியம் மற்றும் மரபுகளை மதித்தல், இலங்கையின் கலாச்சார பன்முகத்தன்மையை அங்கீகரிப்பதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய தேசிய அடையாளத்தை வளர்ப்பது உள்ளிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விவசாயிகள் தமது அறுவடைக்கு ஒத்துழைப்பு நல்கிய சூரியக்கடவுள், நிலம் மற்றும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் விதத்தில் தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது. இதற்கமைய தைப்பொங்கல் நிகழ்வு மதச்சடங்குகளுடன் ஆரம்பமாகியது. வண்ணமயமான கோலங்களால் அலங்கரிக்கப்பட்ட பாராளுமன்ற வளாகத்தில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய சபாநாயகர் குறிப்பிடுகையில், மனிதர்கள் இயற்கையுடன் எவ்வளவு நெருக்கமாகன தொடர்புகளுடன் இருக்கின்றார்கள் என்பதை தைப்பொங்கல் எடுத்துக் காட்டுவதாகவும், இதன் மூலம் அனைத்து இனங்களுக்கிடையேயான ஒற்றுமை மற்றும் சகவாழ்வு நிரூபிக்கப் படுவதாகவும் கூறினார். புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி கருத்துரை வழங்கியதுடன், அனைத்து இனக்குழுக்களுக்கிடையேயானஒற்றுமைக்கு மொழித்தடையைகடக்கவேண்டும்என்றும், புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம் இதனை அடைய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், நிகழ்வில் உரையாற்றிய கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் அவர்கள், இனம் மத பாகுபாடு இல்லாமல் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான நாடாளுமன்றத்தின் முயற்சிகளைப் பாராட்டுவதாகக் கூறினார்.

தமிழர் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையில் நடன நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. இந்த நிகழ்வில் பாராளுமன்ற திணைக்களங்களின் தலைவர்கள், பணியாளர்கள், அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ்விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் அசமந்தமாகச் செயற்படுவது எமக்கு வேதனையைத் தருகின்றது.

மாணவர்களின் சாத்வீக முறையான இப்போராட்டம் வெற்றி பெற அவர்களின் கோரிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன், உரிய சட்டதிட்டங்களுக்கமைய, நீதியாக, காலந்தாழ்த்தாது விரைவில் தீர்த்துவைக்குமாறும் கேட்டுக்கொண்டு, பல்கலைக்கழக ஊழியர் சங்கமாகிய நாமும் அவர்களுக்கு உறுதுணையாக நிற்போம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட கல்லாசனங்களை உடைத்தது யார் என்று கலப்பீடாதிபதியிடம் கேள்வி எழுப்பிய மாணவர்களுக்கும் புகுமுக மாணவர்கள் உட்பட வேறு சில மாணவர்களுக்கும் வகுப்புத்தடை விதிக்கப்பட்டமையை எதிர்த்து, அதனை உடனடியாக நீக்கவேண்டும் என்று வலியுறுத்தி மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நிந்தவூர் ஆதார வைத்தியசாலை முன்பாக எதிர்ப்புப் போராட்டம்

## நோயாளர் பராமரிப்பை உரிய முறையில் மேற்கொள்ள வலியுறுத்தி

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமாரிப்பை உரிய முறையில் மேற்கொள்ளாமை தொடர்பில் கேள்வியெழுப்பிய சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் உமர் அலிக்கு இடமாற்றம் வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் உரிய விசாரணைகளை பக்கச்சார்பின்றி நடத்துமாறு கோரி நேற்று மதியம் பொதுமக்கள் நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த வைத்தியசாலையின் முன்பாக ஒன்று கூடிய மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பி உரிய விசாரணைகள் பக்கச்சார்பின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குரல் கொடுத்த சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் இடமாற்றம் குறித்து மீள்பரிசீலனை வேண்டும் என எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் நேற்று சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் முஹமட் இஸ்மாயில் உமர் அலிக்கு இடமாற்றம் வழங்கியமை கண்டிக்கத்தக்கது எனவும் இவ்விடயம் குறித்து நீதியான விசாரணைகளை மேற்கொண்டு தீர்விணைப் பெற்றுக்க கொடுக்குமாறும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் எம்பி சுகாதார அமைச்சரை நாடாளுமன்றத்தில் வைத்து கேட்டுக் கொண்டார்.

மேலும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை சம்பந்தமான காணொளி ஒன்று ஒரு சில நாள்களாக சமூக வலைத்தளங்களில் காணக்கூடியதாக இருந்தது. இது தொடர்பாக தாதிய உத்தியோகத்தர் உமர் அலி தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நடைபெறுகின்ற முறைகேடுகளை வெளிச்சத்துக்கு கொண்டுவந்ததற்கும், நோயாளர்கள் பராமரிப்பில் கவனவீனமாக இருக்கின்றார்கள் என்பதை சுட்டி காட்டியதற்கும் டாக்டர்மார் நேரத்துக்கு கடமைக்கு வரவில்லை வராமல் மேலதிகநேர கொடுப்பனவுகளை எடுக்கின்றார்கள். கடமைக்கு வராமல் பொது விடுமுறைகளில் ஓய்வு நாள்களில் வேலை செய்ததாக பொய்யாக ஆவணங்கள் பூர்த்தி செய்து அதனை வைத்திய அத்தியட்ச்சகர் உறுதிப்படுத்தி அதன் பின்னர் அதற்கான கொடுப்பனவுகளை பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்று நான் கூறியதற்கு கிடைத்த பரிசு என பாலமுனை வைத்தியசாலைக்கு தற்காலிக இடமாற்றம் பெற்றுள்ள சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் உமர் அலி தனது முகப்புத்தகத்தில் தெளிவு படுத்தி கூறியுள்ளார்.





# ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 19ஆவது ஆண்டு நினைவு

(ஹஸ்பர்)

திருகோணமலையில் 2006.01.24ஆம் திகதி அன்று படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 19 ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு நேற்று (வெள்ளிகிழமை) 3 மணியளவில் திருகோணமலை உவர்மலை லோவெர் வீதியில் அமைந்துள்ள உவர்மலை பூங்காவடியில் நடைபெற்றது.

இந்நினைவேந்தல் நிகழ்வானது வடக்கு கிழக்கு ஊடக அமைப்புக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடை பெற்றது.

இதன்போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் குறித்த படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தொடர்பாக நினைவுப்பேருரையும் இடம்பெற்றது.

இதில் பெரும்பாலான வடக்கு கிழக்கு பகுதிகளை சேர்ந்த ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# கிண்ணியாவில் படைப்புழு தாக்கத்தால் சோளச் செய்கை கடுமையாகப் பாதிப்பு

(ஹலால்தீன்)

அண்மையில் - நாள்களாக தொடர்ச்சியாகப் பெய்த வரும் மழையின் காரணமாகவும், எண்ணெய் பயன் தராதாலும் படைப்புழுவின் தாக்கம் சோளச் செய்கையை பாதித்துள்ளதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்பாறு கிராம சேவகர் பிரிவில் உள்ள சோலைவெட்டுவான், மயிலப்பஞ்சேனை முதலான பகுதிகளில் இந் நிலைமை காணப்படுகின்றது.

இப்பகுதிகளில் சுமார் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்படை புழுத் தாக்கத்தால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக படைப்புழுக்கள் சோளச் செய்கையை பாதித்துள்ளது.

படைப்புழு தாக்கத்துக்கு தகுந்த எண்ணெய் அடித்தும் சரியாகவில்லை சோளம் விளையாதற்கு காரணம் எனத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அதற்கு எதிராக எண்ணெய் அடித்தும் எந்தவித பலனும் இல்லை எனத் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் எங்களுடைய வாழ்வாதார தொழில் இதுதான் படைப்புழுவால் பாதிக்கப்பட்டுள்ளோம் இந்த பகுதியில் இவ்வாறு படைப்புழு தாக்கி உள்ளதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளும்தரப்புக்கு அழுத்தம்தரவேண்டும்

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி பெற்றுத் தருமாறு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை முன்வைத்துள்ளது. இலங்கையில் உள்ள பல ஊடகவியலாளர் அமைப்புக்களின் சார்பிலும் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில்படுகொலைசெய்யப்பட்டஊடகவியலாளர் சுப்பிரமணியம்சுகிர்தராஜனின்19ஆவதுஆண்டுநினைவையொட்டி நேற்று மீண்டும் இந்தக் கோரிக்கை மேற்கிளம்பியுள்ளது. திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் அதிரடிப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட, சாவுத் தண்டனை முறையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை வெளி உலகுக்கு அம்பலப்படுத்துவதில்முதன்மைப்பங்கைவகித்தவர்சுகிர்தராஜன். அதற்காகவே அவர் பின்னர் படுகொலை செய்யப்பட்டார் என்று நம்பப்படுகின்றது. கொல்லப்பட்ட மாணவர்களுக்கும் இதுவரையில் நீதி கிடைக்கவில்லை. சுகிர்தராஜனின் கொலைக்கும் நீதி கிடைக்கவில்லை.

இவையெல்லாம்குறித்துவிசாரிக்கப்படும்என்றுஆளும்தரப்பு தெரிவித்திருந்தாலும், அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தேர்தலுக்கு முன்னர் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை நடத்தினாலும் படையினரைத் தண்டிக்கமாட்டோம் என்ற சாரப்பட பதிலளித்திருந்தார். அதைக் கருத்தில் எடுக்கும்போது படையினர் தொடர்புபட்ட கொலைகள் குறித்து நீதிமன்றங்களில் இந்த ஆளும்தரப்பு அதிகளவில் கவனம்செலுத்துமாஎன்பதுகேள்விக்குரியதே. தமதுமுன்னாள் உறுப்பினர்களும் இடதுசாரிச் செயற்பாட்டாளர்களுமான லலித், குகன் கொலை வழக்குகளையே இன்னமும் மீள் விசாரணைக்குக் கொண்டுவராத இந்த ஆளும்தரப்பு மற்றைய வழக்குகளில் நீதிக்காகச் செயற்படும், அதுவும் ஊடகவியலாளர்களின் படுகொலையில் நீதியை நிலைநாட்ட அக்கறைப்படும் என்று நம்புவதற்கு வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவேஇருக்கின்றன. ஏனெனில்ஊடகவியலாளர்களின் பெரும்பாலான படுகொலைகளுடன் அரச படையினர் மீதும் அவர்களுடன் சேர்ந்தியங்கிய தமிழ் ஆயுதக் குழுக்கள் மீதுமே குற்றச்சாட்டுக்கள் உள்ளன. படையினரை போர் வீரர்களாக உருவகிக்கும் ஓர் ஆளும்தரப்பு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க முன்வரும் என்ற எதிர்பார்ப்பு 'அத்திப்பூ' விவகாரமே.

இந்த நிலையிலேயே கிழக்கு ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆளும்தரப்பிடம் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

1. படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் நீதிக்காக தனியான விசாரணைக்குழுவினை நியமித்து பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதியை வழங்க வேண்டும்.

2.இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் 41 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இதனுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

3.கடத்தப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை இலங்கை அரசானது வெளிப்படுத்த வேண்டும் என்பதுடன், பொறுப்புக் கூறலில் இருந்து அரசு விடுபடக் கூடாது எனவும் வேண்டுகின்றோம்.

4.இலங்கையின் படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

5. அனைத்து ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும்சுதந்திரத்தைபாதுகாக்கதேவையானநடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

6. குற்றவாளிகளை தண்டனையிலிருந்து விலக்களிக்காமலிருக்கும்கலாசாரத்தைகொண்டுவருவதுதான் சுதந்திரமான ஊடக செயற்பாட்டை உறுதி செய்யும். ஆகவே தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஆளும்தரப்பு இவற்றின் மீது கவனம் செலுத்துவதற்கான அழுத்தத்தை அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் வழங்கவேண்டும்.



# தவிக்கும் குழந்தைகள்

**ஐவி.நாகராஜன்**

பல மோசமான விளைவுகளைப் போர் ஏற்படுத்துகிறது. அதில், ஆகக் கொடுமையான விஷயம் குழந்தைகள் பாதிக்கப்படுவதுதான். அது குறித்து நாம் அதிகமாக அறிந்திருக்கவில்லை. காரணம், அந்தச் சூழல் நமக்கு ஏற்பட்டதில்லை. யுனிசெஃப் கணக்குப்படி, உலகில் சுமார் 15 கோடி குழந்தைகள் ஆதரவற்றவர்களாக உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் போரினால் பெற்றோர்களை இழந்தவர்கள்.

சர்வதேச அளவில் இன்று, 47 கோடியே 30 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்றனர். அதாவது, உலகிலுள்ள ஆறு குழந்தைகளில் ஒரு குழந்தை போர்ச்சூழலில் வாழ்கிறது. இது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது என்பது கவலையளிக்கிறது.

மோதல் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை, அதிக அளவில் உள்ள ஆண்டுகளில் 2024-ஆம் ஆண்டும் ஒன்று. போர்ப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் ஒவ்வொரு நாளும் உயிர்வாழப் போராடுகிறார்கள் என்றே சொல்லலாம். தங்களுடைய குழந்தைப் பருவத்தை அவர்கள் இழக்கிறார்கள் என்கிறார் யுனிசெஃப் இயக்குநர் கேத்தரின் ரஸ்ஸல்.

இதேபோன்று, மோதலால் இடம்பெயரும் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகம் என்று சொல்லப்படுகிறது. மோதல், வன்முறையால் 4 கோடியே 72 லட்சம் குழந்தைகள் இடம்பெயர்ந்துள்ளனர். மோதலால் பாதிக்கப்பட்ட நாடுகளில் 5 கோடியே 20 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவில்லை என்றும் ரஸ்ஸல் குறிப்பிடுகிறார்.

ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் போரினால் ஏற்படும் ஆதரவற்ற குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம். உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான அண்மைக்கால போர், ஆதரவற்ற குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. ஆயுத மோதலில் சிக்கித் தவிக்கும் சிரியா மற்றும் ஏமன் நாடுகளும், அதிகப்படியான போரினால் ஏற்படும் ஆதரவற்ற குழந்தைகளை உருவாக்குகின்றன.

உக்ரைன், காஸா மற்றும் சூடானில் நிலவும் மோதல்களில், குடும்ப உறுப்பினர்களை இழந்ததால், லட்சக்கணக்கான குழந்தைகள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி, தாங்களாகவே சண்டை நிலவும் பகுதிகளில் சிக்கிக்கொள்ளும் ஆபத்து ஏற்பட்டது. குழந்தைகள் வாழ்வதற்கு உலகின் மிக ஆபத்தான இடம் என்று அழைக்கப்படும் காஸா பகுதியில், 8 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் வீடுகளை இழந்துள்ளனர் என்று யுனிசெஃப் செய்தித்தொடர்பாளர் ஜேம்ஸ் எல்டர் மதிப்பிடுகிறார்.

போர் தொடங்கியதில் இருந்து காஸாவில் 11 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் இஸ்ரேல் தாக்குதல்களினால் கொல்லப்பட்டனர். இஸ்ரேலில் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 253 பேரில் 40 பேர் வரை கொல்லப்பட்டனர்; இவர்களில் 30 பேர் குழந்தைகள் என்ற தகவல் நம்மைப் பதறவைக்கிறது.

சூடானில் வெடித்த போரினால் 40 லட்சம் குழந்தைகள் இடம்பெயர்ந்துள்ளனர். கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள் கொல்லப்பட்டனர் அல்லது வலுக்கட்டாயமாக ராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நா. சபையின் கூற்றுப்படி, ஆயுத மோதல்களின்போது குழந்தைகளைக் கொல்வது, அவர்களை ஊனப்படுத்துவது, குழந்தைகளை ராணுவ வீரர்களாகப் பயன்படுத்துவது, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை, குழந்தைகளைக் கடத்துவது, பள்ளிகள் அல்லது மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள், குழந்தைகளுக்கான மனிதாபிமான அணுகல் மறுப்பு ஆகியவை நிகழ்கின்றன. 2005- 2022-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில், குழந்தைகளுக்கு எதிராக 3 லட்சத்து 15 ஆயிரம் கடுமையான அத்துமீறல்கள் நடந்ததாக ஐ.நா. கூறுகிறது.

பெரியவர்களின் ஆதரவின்றி வாழும் குழந்தைகள் குழந்தைப் பருவத்துக்குரிய இயல்பான வளர்ச்சியைத் தொலைத்துவிடுகிறார்கள். போரால் பாதிக்கப்படும் குழந்தைகள், மனச்சோர்வு மற்றும் பதற்றம் உள்ளிட்ட உளவியல் சீர்குலைவுகளுக்கு உள்ளாகிறார்கள். மோதல்களில் சிக்கிய குழந்தைகள் பெரும்பாலும் உணவு, நீர், சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை இழக்கின்றனர்.

18 வயதுக்குட்பட்டவர்கள் குழந்தை வீரர்களாக போரில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். 18 வயதுக்கு உட்பட்ட பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், 60 நாடுகளில் போராளிக் குழுக்களில் பணியாற்றுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பு, உணவு, உடை, மருந்து, கல்வி மற்றும் குடும்பம் ஒன்றுசேர்வது, ராணுவத்தில் குழந்தைகளைச் சேர்ப்பது உள்ளிட்ட விஷயங்கள் குறித்து ஜெனீவா உடன்படிக்கைகள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான மாநாடு வரையறுத்துள்ளது. அதைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டும்.

பொருளாதாரத் தடைகளால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகளே. எனவே, பொருளாதாரத் தடைகளைப் பயன்படுத்துவதை ஒரு போர்க் குற்றமாகக் கருதவேண்டும்.

அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் வசிக்கும் குழந்தைகள்- குறிப்பாக, பெரியவர்கள் துணையில்லாமல் இருக்கும் குழந்தைகள்- சிறப்புக் கவனம் பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

போரில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் சுரண்டல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளை அழிக்கும் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

போரினால் குழந்தைகள் ஆதரவற்றவர்களாக ஆகும் பிரச்னை ஆளும்தரப்பு மட்டும் தீர்க்கக்கூடிய பிரச்னையல்ல. உலக அளவிலான அரசியல், பொருளாதாரச் சூழல்களே போர்கள் நடைபெறுவதற்கான காரணங்களாக இருக்கின்றன. போர் என்ற வன்முறை மூலம் தங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள முனைபவர்களே குழந்தைகள் ஆதரவற்றவர்களாக ஆவதற்கு முக்கியக் காரணம்.

# வவுனியா பகுதிகளில் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படும் விவசாய நிலங்கள்

## அதிகாரிகள் மௌனம்

வவுனியா மன்னார் பிரதான வீதியில் குருமன்காடு - பட்டானிச்சூர் இடைப்பட்ட வயல் நிலங்களில் தொடர்ந்தும் மண்கள் கொட்டப்பட்டு அவைகளை மேட்டு நிலங்களாக மாற்றி கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது மௌனம் காப்பதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பட்டானிச்சூர்புளியங்குளத்தின் கீழுள்ள வயல் நிலங்களிலேயே இவ்வாறு மண்கள் கொட்டப்பட்டு வேலிகள் போடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்ற சமயத்தில் வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் 2011 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்தி சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 83 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டளை பிறப்பிக்கப்பட்டு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தற்போது எவ்வித நடவடிக்கைகளும் உரிய அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



இதன் காரணமாக விவசாயம் செய்வதற்கான நிலங்கள் இல்லாமல் போகின்ற நிலைமை வவுனியா மாவட்டத்தில் உருவாகுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு குறித்த மண்கள் , வேலிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். 100

# இமயமலைப் பிரகடனத்தில் ஒப்பமிட்ட விமலசார தேரர் சுகவீனத்தால் இறப்பு

## வவுனியாவில் இன, மத பேதமின்றி பலரும் அஞ்சலி

வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள பிரதான பௌத்த விகாரையின் விகாராதிபதியும், வடக்கு கிழக்கு சங்க நாயக்க தலைவருமான வணக்கத்திற்குரிய சியம்பலகஸ்கொடுவ விமலசார தேரர் சுகவீனம் காரணமாக காலமானார்.

வணக்கத்திற்குரிய சியம்பலகஸ்கொடுவ விமலசார தேரர் சுகவீனம் காரணமாக கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை மரணமடைந்துள்ளார்.

அவர் இமயமலைப் பிரகடனத்தில் கையொப்பம் இட்டவர் என்பதுடன், வவுனியா மற்றும் வடக்கு பகுதியில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த யுத்த காலத்தில் இருந்து



செயற்பட்டதுடன் மூவின மக்களதும் ஆதரவையும் பெற்றிருந்தார்.

வணக்கத்திற்குரிய சியம்பலகஸ்கொட்டுவ விமலசார தேரரின் பூதவுடல் நேற்று (வெள்ளிக்கிழமை) வவுனியா விகாரையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, அரச அதிகாரிகள், பாதுகாப்புதரப்பினர், பௌத்த மதகுருமார் மற்றும் மூவின மக்களும் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அவரது இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. 100






# பொல்லடி குழுவினருக்கு மகத்தான கௌரவிப்பு

(தில்சாத் பர்வீஸ்)

டேலன்ட் பிளஸ் டிவியால் பொல்லடி குழுவினரை கௌரவிக்கும் நிகழ்வு சம்மாந்துறை சென்னல் சாஹிறா மகா வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். இஸ்மாயில் தலைமையில் சம்மாந்துறை சென்னல் சாஹிறா மகா வித்தியாலயத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

பொல்லடி குழுவினர் தனது இசை மற்றும் கலை திறமைகளை வெளிப்படுத்தியமையால் அதனை கௌரவப்படுத்தி சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு, டேலன்ட் பிளஸ் டிவியின் பணிப்பாளர் அல்ஹாபிழ் றிசான் முகம்மட் சில்ஹான், நம்பிக்கையாளர் சபை உறுப்பினரும், டேலன்ட் பிளஸ் டிவியின் ஆலோசகர் எஸ்.எம். நபீர், மட்டக்களப்பு சம்மாந்துறை சிலியட் உயர் கல்வி நிறுவனத்தின் பிரதம கணக்காளர் எஸ்.எம்.ஜிப்ரி, ஆர்.எஸ்.எச். லங்கா சோலர் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். றிசான் மற்றும் பாடசாலை சமூகம் என பலரும் கலந்து கொண்டனர்.





# கிளீன் சிறிலங்கா திட்டத்தை முன்னெடுத்த முப்படையினர்

(ஹஸ்பர்)

புதிய அரசாங்கத்தின் கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் திருகோணமலை கடற்கரை பகுதி நேற்று (வெள்ளிக்கிழீமை) சுத்தம் செய்யப்பட்டது.

குறித்த திட்டத்தை திருகோணமலை நகரசபை மற்றும் முப்படையினர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன் போது திருகோணமலை கடற்கரை மற்றும் அதனை அண்மித்த பகுதியில் உள்ள பிளாஸ்டிக் உட்பட பல குப்பைகளை அப்புறப்படுத்தி சுத்தம் செய்தனர்.

அதிகளவான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருவதுண்டு.

குறித்த நிகழ்வில் திருகோணமலை நகரசபை ஊழியர்கள், முப்படையினர் என பலரும் கலந்து கொண்டனர்.





# வவுனியா விபுலானந்தா கல்லூரியில் பாரம்பரிய பொருள்கள் கண்காட்சி

## பொங்கல் திருவிழாவும் நடந்தது

பாரம்பரிய பொருள்கள் கண்காட்சியும், பொங்கல்திருவிழாவும்வவுனியாவிபுலானந்தா கல்லூரியில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் திருமதி ஞானமதி மோகனதாஸ் அவர்களின் வழிகாட்டலில் விபுலானந்தா கல்லூரியின் ஆரம்ப பிரிவு அதிபர் சி.தர்சன் அவர்களின் தலைமையில் கல்லூரிவளாகத்தில்இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது 1- 5 வரையான ஆரம்ப பிரிவு மாணவர்கள் பாராம்பரிய முறைப்படி 21 பானைகளில் பெற்றோர்கள், ஆசிரியர்களுடன் இணைந்து பொங்கலிட்டு வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இதன்போது தமிழர் பாரம்பரிய பாக்குவெட்டி, மண்குடம், சத்தகம், அரிக்கன், குதிரை வண்டி, விளக்கு, நீத்துப் பெட்டி, பனங்கட்டி உள்ளிட்ட பல்வேறு பொருளள்களையும் காட்சிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100








காலைக்கதிர்
Kalaikkathir

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குறுதிகளை ஆளும்தரப்பு வழங்கியது.

இன்று அந்தப் போலியான வாக்குறுதிகள் ஆளும்தரப்புக்கு எதிராகத் திரும்பியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவே இந்த நாட்டு மக்களின் உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்தினார்.

அவரால்தான் இந்த நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாத்தார். தம்புத்தேகம உடும்பின் உயிரையும் மஹிந்தவே பாதுகாத்தார்.

அரசியலில் தற்போது வேறுபாடுகள் காணப்பட்டாலும் மஹிந்த ராஜபக்ச மீதான எமது மதிப்பு என்றும்போலவே உள்ளது.

அவருக்குநெருக்கடிஏற்படுத்தினால்அதற்கு எதிராக முன்னிலையாகுவோம் என்பதை ஆளும்தரப்புக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆளும்தரப்பின் போலியான வாக்குறுதிகளை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஆளும்தரப்புக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் என்றார்.

## மகிந்தவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள்கூட அங்கு இருக்கமாட்டார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பிள்ளைகள் அவரை பார்த்துக்கொள்ளவேண்டும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிடுகிறார். தமது அறிவு மற்றும் நிலைப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைச்சர் அவ்வாறு பேசுகிறார்.

நளிந்த ஜயதிஸ்ஸவின் பெற்றோர் அவருக்கு கல்வியை வழங்கியுள்ளார்களே தவிர அறிவை வழங்கவில்லை என்றே குறிப்பிடவேண்டும். 30 ஆண்டுகாலப் போரை முடிவுக்கு கொண்டுவந்து இந்த நாட்டை ஒருமுகப்படுத்திய மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆயுதமேந்தி மக்களை கொன்ற அனுபவம் நளிந்தஜயதிஸ்ஸவுக்கு இருக்கலாம். ஆனால், மஹிந்த ராஜபக்சவின் பிள்ளைகளுக்கு அவ்வாறு அனுபவம் கிடையாது. ஆகவே, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு படைகள் அவசியம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் வீட்டின் பெறுமதியை குறிப்பிடும் ஜனாதிபதி அவர் வசிக்கும் ஜனாதிபதி மாளிகையின் பெறுமதியையும் நாட்டு மக்களுக்குக் குறிப்பிடவேண்டும். நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. அரிசி, தேங்காய் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை. மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி முதல் அரசாங்கத்தில் உள்ள அனைவரும் சிறுபிள்ளைத்தனமான கருத்தை மாத்திரமே குறிப்பிட்டுக்கொள்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்று மேடைகளிலும், பொது இடங்களிலும் மாத்திரம் குறிப்பிடப்படுகிறது. இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு ஏதும் கிடைக்கவில்லை. அவ்வாறு உத்தியோகபூர்வ அறிவிப்பு கிடைத்தால் மறுகணமே மஹிந்த ராஜபக்ச விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறுவார். ஒரு நாள்கூட அங்கு இருக்கமாட்டார் என்று உறுதியாக குறிப்பிடுகிறேன் என்றார்.

## மகிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின் முன் பதிலளிக்க நேரிடும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி என்ன சொல்கிறார் என்று அமைச்சரவை உறுப்பினர்களுக்கு தெரியாது, அமைச்சர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது ஜனாதிபதிக்குத் தெரியாது. மக்கள் மத்தியில் பிரபல்யமடைவதாக நினைத்துக்கொண்டு மனம் போனபோக்கில் பேசிக் கொள்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்த நாட்டுக்கு அளப்பறிய சேவையாற்றியுள்ளார். அதேபோல் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர்கள்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட அரச உத்தியோகபூர்வ இல்லங்களை மீளப் பெறுவதாக ஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. ஒன்று வீடு வழங்கப்படும் அல்லது மாதம் 30 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிடுகிறார். ஜனாதிபதி தனது பதவிக்கு பொருத்தமான வகையில் பேச வேண்டும்.

ஓய்வுபெற்ற முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பொருத்தமான வீடு வழங்கப்படவேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வீடு ஜனாதிபதி பதவி வகித்த ஒருவர் வசிக்கக்கூடிய வகையில் இருத்தல்வேண்டும் என்பதை ஆளும்தரப்புத் தெரிந்துகொள்ளவேண்டும். சட்டத்தை பற்றி போதிய அறிவு இல்லாவிடின் சட்டநிபுணர்களிடம் ஆளும்தரப்பு ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளின் விவகாரத்தில் ஆளும்தரப்பு பாதாள குழுக்களை போல் சண்டித்தனமாகச் செயற்படக்கூடாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு உயிரச்சுறுத்தல் காணப்படுகிறது என்று புலனாய்வுப்பிரிவு முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் மற்றும் சலுகை தொடர்பில் ஆராய்ந்த குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தபோதும் அதனைக் கருத்திற் கொள்ளாது அவருக்கு வழங்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டு, பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு ஆளும்தரப்பும், முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை மற்றும் சலுகைகள் தொடர்பில் ஆராய்ந்த குழுவும் பொறுப்புக் கூறவேண்டும். இந்தக் குழுவின் முழுமையான அறிக்கையை தகவலறியும் உரிமை சட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். அதனைத் தொடர்ந்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் எடுக்கப்பட்டதாக ரவிகரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதிநிதிகள் 12 பேரும், தேசிய மீனவஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மற்றும், மன்னார் இணைப்பாளர்களும் நேற்று நாடாளுமன்றத்திற்கு வருகைதந்து வடமாகாண எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட, பதினொரு எதிர்க்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் மற்றும், உள்ளூர் மீனவர்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பேசப்பட்டது.

அத்தோடு அத்துமீறி எல்லைதாண்டிவரும் இந்திய இழுவைப் படகுகளின் இழுவைமடித் தொழில்களால் வடபகுதியைச் சேர்ந்த சிறுதொழிலாளர்கள் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றமை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டது.

இந்நிலையிலேயே வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி குழுஒன்றை அமைப்பதென

# மன்னால் காற்றாலைத் திட்டம் நிறுத்தப்பட்டதான செய்தி பொய்

## அதானி நிறுவனம் அறிவிப்பு

மன்னார் மற்றும் பூநகரியில் அமையவுள்ள அதானி நிறுவனத்தின் காற்றாலை மின் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் தவறானவை என்று அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அதன் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் மற்றும் பூநகரியில் அமையவுள்ள அதானி நிறுவனத்தின் காற்றாலை மின் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் தவறானவை. இத் திட்டம் நிறுத்தப்படவில்லை என்பதை நாங்கள் திட்டவட்டமாகக் கூறுகிறோம். மே 2024இல் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தை மறுபரிசீலனை செய்ய ஜனவரி 2, 2025 அன்று இலங்கை அமைச்சரவை எடுத்த முடிவு, குறிப்பாக ஒரு புதிய ஆளும்தரப்புடன், அவற்றின் தற்போதைய முன்னுரிமைகள் மற்றும் எரிசக்திக் கொள்கைகளுடன் விதிமுறைகள் ஒத்துப்போவதை உறுதி செய்வதற்கான மறுஆய்வுசெயல்முறையின் ஒருபகுதியாகும். இலங்கையின் பசுமை எரிசக்தி துறையில் 1 பில்லியன் டொலர்களை முதலீடுசெய்வதற்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் அதானி நிறுவனம் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது என்றுள்ளது.

முன்னதாக, மன்னார் மற்றும் பூநகரியில் உள்ள சர்ச்சைக்குரிய 484 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை 'அதானி கிரீன் எனர்ஜி எஸ்.எல். லிமிடெட்' நிறுவனத்திற்கு வழங்குவதற்கு கடந்த ஆண்டு ஜூன் மாதம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் எடுக்கப்பட்ட முடிவை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அமைச்சரவை நிறுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவித்தன.

உள்ளூர் விலைமுறியாளர்கள் 4.88 ரூபாவுக்கு மின் அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு பரிந்துரைத்திருந்தபோதிலும், 8.26 டொலருக்கான அதானி நிறுவனத்தின் முன்மொழிவுக்கு கடந்த ஆளும்தரப்பு இணக்கம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயரும் பறவைகளுக்கு மன்னார் பிரதேசம் பிரதான வழித்தடமாக இருப்பதாகக் குறிப்பிட்டு பல சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகள் இத்திட்டத்துக்கு தொடர்ச்சியாக கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டு வந்தன. அதற்கமை தமது ஆட்சியில் இந்த திட்டம் நிறுத்தப்படும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தேர்தல் பிரசாரங்களின் போது குறிப்பிட்டிருந்தார்.

அந்த வாக்குறுதிக்கமைய இந்தத் திட்டத்திற்கு 2024-05-06 திகதியிடப்பட்ட அமைச்சரவை பத்திரத்தை இரத்து செய்துள்ளதாக அந்தச் செய்திகள் தெரிவித்தன.

# மாகாண சபைத் தேர்தலுக்கான சட்டத் திருத்தங்களில் மும்முரம்

மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துவதற்கான சட்டத்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுவதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

2016 ஆம் ஆண்டு 17ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் கலப்பு தேர்தல் முறையின் கீழ் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு நாடாளுமன்ற அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன கூறினார்.

அதனை நடைமுறைப்படுத்துவற்குஎல்லை நிர்ணயம் தொடர்பிலான ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற போதிலும் அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் மாகாணசபைத் தேர்தலை கடந்த கால முறைமையிலேயே மீண்டும் நடாத்துவது தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

1988ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமையவே பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும்.

இதற்கமைய விரைவில் அமைச்சரவையில் மகஜர் சமர்ப்பிக்கப்படும் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை ஓகஸ்ட் மாதம் நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன மேலும் கூறினார்.

## உள்ளாட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிகமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 2 மனுக்களின் பிரதிகளும் கிடைக்கப் பெற்றுள்ளன என்றார். இதற்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நான்கு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) தொடர்பான சட்டமூலத்தை பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்திம அபேரத்ன, முதலாம் வாசிப்புக்காக 2025.01.09 ஆம் திகதியன்று சபைக்கு சமர்ப்பித்தார்.

குறித்த சில உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் கோரப்பட்டு பிற்போடப்பட்டுள்ளவிடத்துஇ அத்தகைய உள்ளூர் அதிகாரசபைகள் தொடர்பில் புதிய நியமனப்பத்திரங்களைக் கோருவதற்காகவும், தேர்தல்களை நடாத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புப்பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது .

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பை 2023 .03.09 ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த நிலையில் நிதி நெருக்கடி காரணமாக காலவரையறையின்றி பிற்போடப்பட்டது.

இவ்வாறானநிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து உடனடியாக தேர்தலை நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியிருந்தது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களுக்கு அமைய தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது ஆகவே மீண்டும் வேட்புமனுக்களை கோருமாறு அரசியல்கட்சிகள் வலியுறுத்தியதை தொடர்ந்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு அரசாங்கம் தீர்மானித்து, உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் வகையில் குறித்த சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

## கொலையுண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று மாலை திருகோணமலையில் எஸ்.சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்ட இடமான ஓசில் பார்க்கில் நடைபெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு கிழக்கு தெற்கு ஊடகவியலாளர் கலந்துகொண்டிருந்தனர்.

ஊடகவியலாளர்கள் அங்கிருந்து சுகாதராஜனின் திரு உருவப்படத்தையும் பதாகைகளையும்,ஏந்தியவாறுமுழக்கங்களை எழுப்பியவாறு கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம்வரை ஊர்வலமாகச் சென்றனர்.

தொடர்ந்து ஊடக அமைப்புகள் சார்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்குநீதிவேண்டி,காணாமல்ஆக்கப்பட்டு கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு விசாரணைகளை துரிதமாக முன் நகர்த்த வேண்டியும், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர்அருள்ராஜாவிடம்மனுஒன்றையும் கையளித்தனர்.

படுகொலை செய்யப்பட்ட, காணாமலாக் கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதிக் கோரிக்கை எனும் தலைப்பிலான அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

படுகொலை செய்யப்பட்ட, காணாமலாக் கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி கோரிய எமது ஏகோபித்த கோரிக்கையினை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

இலங்கையின் ஊடகத்துறை வரலாறு பல்வேறு கொலைகளையும், கொடுமைகளையும், அச்சுறுத்தல்களையும், நெருக்கடிகளையும் உள்ளடக்கியதாகவே கடந்து போயிருக்கிறது. அவ்வாறானவைகள் இனிவரும் காலங்களிலேனும் இல்லாதிருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

ஊடகப் பணியை, நேர்மையாக முன்னெடுப்பவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையிலேயே கடந்த யுத்த காலங்களில் பணியாற்றிய ஊடகவிய லாளர்கள் பலர் தமது உயிரைக்காத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்குமப்பால் பலரது உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளதுடன், காணாமலாக்கப்பட்டும்,பலர்உயிரைப்பாதுகாப் பதற்காகஊடகப்பணியைவிட்டொதுங்கியதுடன் பலர்நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து தப்பியோடி தஞ்சமடைந்திருக்கின்றனர்.

குறிப்பாக வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஊடக சுதந்திரத்தை பேண தொடர்ந்தும் குரல் கொடுக்கின்ற அதேவேளை கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கப் பெற வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் 41க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடுவழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் கடந்த தசாப்தத்தில் கொல்லப்பட்ட 44 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகஊழியர்களில்பெரும்பாலானோர்வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள்.

ஐயாத்துரை நடேசன், தராக்கி த.சிவராம், எல்.எம்.பலீல் (நற்பிட்டிமுனை பலீல்), சுப்பிரமணியம் சுகிர்தராஜன், சின்னத்தம்பி சிவமகாராஜா, சுப்பிரமணியம் ராமச்சந்திரன், சந்திரபோஸ் சுதாகர், செல்வராசா ரஜீவர்மன், இசைவிழி செம்பியன் (சுபாஜினி), பரணி ரூபசிங்கம் தேவகுமார், இராசையா ஜெயேந்திரன், புண்ணியமூர்த்திசத்தியமூர்த்தி, மகாலிங்கம் மகேஸ்வரன், மாரியப்பு அந்தோணிகுமார், ஷோபனா தர்மராஜா (இசைப்பிரியா),; மற்றும் சகாதேவன் நிலக்சன் உள்ளிட்டவர்கள் 2004 - -2010 வரையான காலப்பகுதியில் கொல்லப்பட்டதுடன் , அதே காலப்பகுதியில் திருகுலசிங்கம் தவபாலன், பிரகீத்ஆகிய ஊடகவியலாளர்கள்காணாமலும் ஆக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளை வடக்கு - கிழக்கு- தெற்கு ஊடகஅமைப்புக்கள்தொடர்ச்சியாககண்டித்தே வந்துள்ளன.

2000ஆம் ஆண்டில் பிபிசி செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டதோடு அரங்கேறிய ஊடகப் படுகொலைகள் நீண்டுகொண்டே சென்றிருந்தது.

வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள்கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீதுதாக்குதல்நடத்தப்பட்டிருக்கிறது. ஆனாலும், அந்த தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை.

நாம் வடக்கு, கிழக்கில் ஊடக சுதந்திரத்தை பேண தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதேவேளைகொல்லப்பட்டமற்றும்காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களுக்கான சமரசம் செய்துகொள்ளத் தேவையற்றதான நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிவருகின்றோம்.

இலங்கையில் ஆட்சிகள் மாறினாலும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதிக் கோரிக்கைக்கான சரியான விசாரணைகள் கூட முன்னெடுக்கப்படவில்லை. 2005 - 2009 வரையான நல்லாட்சி காலத்தில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களது குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக இழப்பீடொன்றை வழங்குவதற்காகவிசாரணை குழுவொன்றும் அமைக்கப்பட்டது. இருப்பினும் அது எந்தப்பயனையும் பெற்றுத்தரவில்லை.

பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவ்வாறு விசாரணைக்குழுவே நியமிக்கப் பட்டிருக்கவில்லை என வாதிடப்பட்டிருந்தது. அவர் ஆட்சியை விட்டுத் துரத்தப்படும் வரை ஊடகவியலாளர்களின் விடயங்கள் எதுவும் கவனத்திலெடுக்கப்படவில்லை.

பின்னர் நடைபெற்ற ஆட்சியிலும் பூசிமெழுகல்களே நடைபெற்றிருந்தன. தாங்கள் ஜனாதிபதியானதையடுத்து ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசாங்கத்தின் ஆரம்பத்திலேயேகைவிடப்பட்டசர்ச்சைக்குரிய வழக்குகளை விசாரணைக்குட்படுத்தப் போவதாக அறிவித்திருந்தீர்கள். அதில் த.சிவராம், லசந்த விக்கிரமதுங்க போன்ற ஊடகவியலாளர்களுடைய வழக்குகளும் உள்வாங்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் நவம்பர் இறுதிப்பகுதியில் அமைக்கப்பட்ட புதிய ஆளும்தரப்பின் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த 2024 டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது, படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவித்தார். தமிழ் ஊடகவியலாளர்கள் மாத்திரமல்ல. சிங்கள மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நாட்டில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆளும்தரப்பு முன்னிற்கிறது என்றும் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் விசாரணைகளின் நிலைமை தொடர்பில் இன்னமும் எவ்வித தகவல்களும் வெளியில் வரவில்லை. நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம்,ஊழல்களைக்கண்டுபிடிக்கும் செயற்பாடுஎனப்பலவேலைகளுக்குமத்தியில் படுகொலையான ஊடகவியலாளர்கள், காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் விசாரணைகள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட அனைத்து ஊடகவிய லாளர்களுக்கும் நீதி வழங்கப்படவேண்டும் என சர்வதேச, தேசிய, வடக்கு, கிழக்கு ஊடக அமைப்புக்களால்தொடர்ச்சியாகவும், மீண்டும் மீண்டும் ஆளும்தரப்பை வலியுறுத்துவதை மாத்திரமே செய்யமுடிகிறது. அந்தவகையில் ஊடகவியலாளர்களின் மரணம் மற்றும் காணாமலாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள்தவிர்க்கப்பட்டுவருவதாகவே எம்மால் ஊகிக்க முடிகிறது,

வடக்கு கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் இதுவரை அதிகாரத்திற்குவந்த எந்தவொரு அரசாங்கமும் முறையான பக்கச்சார்பற்ற விசாரணையை மேற்கொள்ளவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு அறிவித்தலை வெளியிடுவதும் பின்னர் அது கைவிடப்படுவதும் தற்போதைய ஆளும்தரப்பின் ஆட்சியில் நடைபெறாது என நம்புகிறோம்.

படுகொலை செய்யப்பட்ட காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைப்பதும் நிவாரணங்கள் வழங்கப்படுவதும் பறிக்கப்பட்ட உயிர்களையும் அவர்களின் குடும்பங்களின் கடந்தகால சிறப்பான வாழ்வையும் தந்துவிடப்போவதில்லை என்றாலும் ஒரு நிம்மதியையேயும் ஏற்படுத்தும் என்றும் நம்புகின்றோம்.

மக்களுக்கு உண்மையான தகவலை வழங்கும் தன்னுடைய பணியைச் செய்த ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் 19வருடங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டார். அவருடைய நினைவு நாளில் இந்தக் கோரிக்கையை நாங்கள் முன்வைக்கிறோம்.

எமது கோரிக்கைகள்:-

1.படுகொலைசெய்யப்பட்டமற்றும்காணாம லாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் நீதிக்காக தனியானவிசாரணைக்குழுவினைநியமித்து பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதியை வழங்க வேண்டும்.

2.இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் 41 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள்கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இதனுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைதுசெய்யப்பட்டுசட்டத்தின்முன்நிறுத்தப்படல் வேண்டும்.

3.கடத்தப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை இலங்கை அரசானதுவெளிப்படுத்தவேண்டும்என்பதுடன், பொறுப்புக் கூறலில் இருந்து அரசு விடுபடக் கூடாது எனவும் வேண்டுகின்றோம்.

4.இலங்கையின் படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

5.அனைத்து ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

6.குற்றவாளிகளைதண்டனையிலிருந்து விலக்களிக்காமலிருக்கும் கலாசாரத்தை கொண்டுவருவதுதான் சுதந்திரமான ஊடக செயற்பாட்டை உறுதி செய்யும். ஆகவே தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் - என்றுள்ளது.

# இலங்கையின் சொத்துக்களை மீட்க சுவிஸ் ஒத்துழைக்கும்

## அந்த நாட்டுத் தூதர் தெரிவிப்பு

இலங்கையிலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு சுவிட்சர்லாந்து ஆளும்தரப்பு உதவி வழங்கும் என்று இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சுவிட்சர்லாந்துத் தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் தெரிவித்தார்.

இந்த நாட்டின் சொத்துக்களை மீட்பதற்கு எடுக்க வேண்டிய சர்வதேச நடவடிக்கைகள் குறித்து சுவிட்சர்லாந்து தூதுவர் இதன் போது வழிகாட்டுதல்வழங்கினார். இதற்காகபூர்வாங்க வசதிகளை வழங்க தேவையாயின் எந்த நேரத்திலும் அதற்கு உதவி வழங்க அவர் உடன்பாடு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போதே தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஊழல் எதிர்ப்பு திட்டத்திற்கு சுவிட்சர் லாந்தின் அனுபவத்தையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்குவது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்க முன்னுரிமை திட்டங்களுக்கு சுவிட்சர்லாந்து அரசாங்கத்தின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய தேவையான உதவிகள் மற்றும் 'தூய சிறீலங்கா' திட்டத்திற்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு அபிவிருத்தி, தேசிய ஒற்றுமை மற்றும் ஏனைய சமூகப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும்தேவையானஉதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் சுவிட்சர்லாந்து தூதுவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரொஷான் கமகேவும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்.




# கல்கிசை முதல் காங்கேசன்வரை பெப். 2 முதல் இரவுத் தொடருந்து

## அமைச்சர் பிமலிற்கு சர்வதேச இந்துமத பீடம் நன்றி தெரிவிப்பு

அண்மைக்கலமாககொழும்பு கோட்டைக்கும் காங்கேசன் துறைக்குமான இரவு ரயில் சேவைநடைபெறாமல்இருந்தது. இதனால் வடக்கு நோக்கிய பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தனார். இந்தவகையில் சர்வதேச இந்துமதபீட செயலாளர்சிவஸ்ரீ ராமசந்திரகுருக்கள்பாப்புசர்மா இது பற்றிய கோரிக்கையை போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்னாயகவிற்கு இரவு ரயில் சேவை நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

அந்தவகையில் நாடாளுமன் றத்தில் நடைபெற்ற பொங்கல் பூஜையின் போது இது பற்றி பாபுசர்மா அமைச்சர் பிமல் ரத்னாயகவிற்கு தெரிவித்த போது அவர் பெப்ரவரி முதலாம் திகதி முதல் இரவு தபால் சேவை நடைபெறும் என்றும் அது கல்கிசையில் இருந்து காங்கேசன் துறைக்கான பயணமாக அமையும் என்றும் தெரிவித்திருந்தார். அத்துடன் கடற்தொழில் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரனிற்கும் நன்றியை தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் அமைச்சர் பிமல் ரத்னாயகவிற்கு பாபுசர்மா மிகுந்த நன்றியையும் தெரிவித்திருந்தார். இந்த செயல் வடபகுதி மக்களுக்கு நல்ல வரப்பிரசாதம் என்றும் தெரிவித்துக்கொண்டரர்.

# பின்தங்கிய புதுநகரம் அ.த.க.பா.வில் 5 மாணவர்கள் புலமைப் பரிசில் சித்தி

(சகா தேவராஜா)

சம்மாந்துறைவலயத்துக்குட் பட்ட பின்தங்கிய மல்வத்தை புதுநகரம் அ.த.க. பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஐந்து மாணவர்கள் சித்தி அடைந்து சாதனை படைத்துள்ளார்கள்.

சம்மாந்துறை கோட்டத் தில் அதி கூடிய ஐந்து சித்திக ளைப்பெற்ற ஒரேயொரு தமிழ்ப் பாடசாலையாக இப் புதுநகரம் அ.த.க. பாடசாலை திகழ்கிறது.

புதுநகரம் அ.த.க. பாடசாலையின் அதிபர் இ.ஜெயசிங்கம் இத்தகவலை உறுதிப்படுத்தினார்.

குபேரன் தஸ்வின் என்ற மாணவன் அதிகூடிய 170 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மேலும் இராமச்சந்திரன் கிருஷ்னியா என்ற மாணவி 161 புள்ளிகளையும், செல்வராஜ் சயானிகா என்ற மாணவி 146 புள்ளிகளையும் தீபன் ரபீஸ்னா 144 புள்ளிகளையும் யோகேஸ்வரன் ஹிவானு 145 புள்ளிகளையும் பெற்று சாதனை படைத்துள்ளனர் .

# சம்புநகர் அக் ஃ அல்- மினா வித்தி. மாணவன் புலமைப் பரிசிலில் சித்தி

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் முறையாக அட்டாளைச்சேனை சம்புநகர் அக் ஃ அல்- மினா வித்தியாலயத்தில்சித்தியடைந்த மாணவர் எம்.எச்.எம்.மில்பர் (146), கற்பித்த ஆசிரியர் எ.ஜி.ஹம்சார் ஆகியோரை பாடசாலை அதிபர் எம் ஐ.எம்.றியாஸ் மற்றும்

அட்டாளைச்சேனை கோட்டப் பணிப்பாளர் எம் எச்.எம் றஸ்மி, சக ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து நேற்று (வெள்ளிக்கிழமை) பாடசாலையில் வாழ்த்தி பாராட்டினர்.



# கோட்டத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்த பாடசாலையாக அல் முனிரா பெண்கள் பாடசாலை



(றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் அட்டாளைச்சேனை கோட்டக்கல்விக்குட்பட்ட அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் 17 மாணவர்கள் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து கோட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுள்ளனர்.

அட்டாளைச்சேனை கல்வி கோட்டத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்த ஒரு பாடசாலையாக அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலை காணப்படுகின்றது.

இதேவேளைசித்தியடைந்தமாணவர்களை பாராட்டும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.ரீ.எம்.சியாத் தலைமையில் நடைபெற்ற போது நிகழ்வில் ஆரம்ப பிரிவு வலயத் தலைவர் எம்.ஐ.ஜௌபர், பிரதியதிபர்களான எம்.ஏ. சுஹைரா, ஏ.கே.அனீஸ், உதவியதிபர் ஏ.ஜீ.எம்.றினீஸ் மற்றும் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்க ளான எம்.வை.சம்ஹூடீன், ஏ.ஆர்.றிம்ஸான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 128 கிலோ மாட்டிறைச்சியுடன் வாகனம் பொலிஸில் சிக்கியது

## வவுனியாவில் சம்பவம்: இருவர் கைது

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4 ஆம் கட்டை பகுதியில் 128 கிலோ மாட்டிறைச்சியுடன் வாகனம் ஒன்றைக் கைப்பற்றியுள்ளதுடன் இருவரை கைது செய்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கேதிவுல்வெள தலைமையிலான பொலிஸ் குழுவினர் நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில்திடீர்சோதனைநடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது குறித்த பகுதியில் பயணித்த பட்டா ரக வாகனத்தினை சோதனைக்குட்படுத்திய போது கொள்கலன்களில் 128கிலோமாட்டிறைச்சியை முறையற்ற முறையில் கொண்டு சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த வாகனத்தினை பொலிஸார் கையப்படுத்தியதுடன், வாகனத்தின் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் முன்னெடுக்கப்பட்ட மேலதிகவிசாரணைகளின் பின்னர் கையப்படுத்தப்பட்ட 128 கிலோ மாட்டிறைச்சி உட்பட பட்டா ரக வாகனம் என்பவற்றுடன் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆயர்படுத்துவதற்குரிய மேலதிக நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். 100



# பாடசாலை மத்தியஸ்தம் குறித்து மாணவர்களுக்கு பயிற்சி அமர்வு

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மத்தியஸ்தம் தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மத்தியஸ்த ஆணைக்குழு பங்களிப்புடன் பெரிய நீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ்.கோகுல்ராஜ் வருகைதந்து வரவேற்புரையுடன் இச்செயலமர்வை ஆரம்பித்து வைத்தார்.அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலையில் இருந்து சுமார் 50 இற்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது செயலமர்வானது மத்தியஸ்த சபை உத்தியோகத்தர்களான அருள் பிரசாந்தன், எஸ்.றிஸ்மினா ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இச்செயலமர்வானது மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எஸ்.றிஸ்மினா ஏனையமத்தியஸ்த உத்தியோகத்தர்கள்பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்தது.

இதன் போது பாடசாலை மத்தியஸ்தம், மத்தியஸ்தவரலாறுமுரண்பாடு,முரண்பாட்டுதீர்வின் முக்கியத்துவம் தொடர்பாடல் கலந்துரையாடல் மத்தியஸ்தபடிமுறைகள்பாடசாலைமத்தியஸ்தத்தில் ஆசிரியர்களின் பங்கு என்பன ஆசிரியர்களுக்கு தெளிவூட்டப்பட்டன.







# தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் சாதாரண மாணவர்களுக்கு கருத்தமர்வு

வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாடத்திற்கான இலவச கருத்தரங்கு அண்மையில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மண்டபத்தில் மன்றத்தலைவர் உமாபதி, பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் தலைமையில் இடம் பெற்றது.










# ஆசிரியர்களும் மாணவர்களும் மாலை அணிவித்துப் பாராட்டு

(ஹமீட்)

வியாழக்கிழமை ஆம் திகதி வெளியான 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 8 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 3 மாணவர்கள் 1 புள்ளியால் தெரிவாகுவதற்கான வாய்ப்பை இழந்துள்ளனர்.

மேலும், எமது அந்நூர் மகா வித்தியாலயத்தில் 5 ஆம் தர வகுப்பை கற்பித்த ஆசிரியை எஸ்.றுஸ்தா, ஆசிரியர் சுலைமாலெப்பை ஆகியோர்களுக்கு மற்றும் சித்தி அடைந்த மாணவர்களுக்கும் மாலை அணிந்து கௌரவம் அளித்தார்கள்.

இதற்காக அரும்பணி செய்த அதிபர் அஸ்மி, பிரதி அதிபர் றமீஸ் மற்றும் ஆரம்ப தர வலய தலைவர் முஸம்மில் ஆசிரியர்

அனைவருக்கும் பாராட்டப்பட்டார்கள்.



# தமிழ், முஸ்லிம் சமூகங்களை அரசு புறக்கணிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பது கவலைக்குரியது

## உதுமாலெப்பை நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

(ஹமீட்)

நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 12 லட்சம் தமிழ்,முஸ்லிம் மக்கள் ஆளும் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். ஆளும் கட்சிக்கு பெரும் தொகையான தமிழ்,முஸ்லிம் மக்கள் வாக்களித்தமைக்கு பிரதான காரணம் உள்ளது. முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோட்டாபய ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது ஊமைகளாக செயற்பட்டனர். இவ்வேளையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாஸ, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் றவூப் ஹக்கீம் அவர்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுத்தீன் ஆகியோர்கள் முஸ்லிம்களின் ஜனாஸா எரிக்கப்பட்ட விடயத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தனர். அன்று எதிர் கட்சியிலிருந்த அனைவரும் முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தனர் என நாடாளுமன்றத்தில் 'க்ளீன் சிறிலங்கா' கருத்திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு மௌனமாக இருந்த அனைவரும் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தோல்வி அடைந்துள்ளனர். நாடாளுமன்றத்தில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தெரிவு செய்யப்பட்டு க்ளீன் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

க்ளீன் சிறீலங்கா திட்டம் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவில் 18 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நமது நாட்டின் சுதந்திரத்திற்காக ஒத்துழைப்பு வழங்கிய தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகள் நியமிக்கப்படாத நிலையை மாற்றியமைத்து தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். அண்மையில் நடைபெற்ற உயர் நீதியரசர்கள் நியமனத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு பாரபட்சம் ஏற்பட்டுள்ளது குறித்து முஸ்லிம் சமூகம் கவலை அடைந்துள்ளது. முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த சிரேஸ்ட நீதியரசர் லாபார் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

நீதித் துறை நியாயமாக செயற்பட வேண்டும். புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் இதுவரையும் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படாத நிலை தொடர்கிறது. ஆளும் கட்சிக்கு வாக்களித்த முஸ்லிம்கள் எங்களிடம் இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேசுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். முஸ்லிம் ஒருவரை அமைச்சரவையில் நியமிக்குமாறு எமது முஸ்லிம் சமூகம் கோரிக்கை விடுப்பதனை ஆளும் கட்சியினர் வேறு விதமாக விமர்சனம் செய்ய வேண்டாம். முஸ்லிம் ஒருவரை அமைச்சரவையில் நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்த போது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களில் தகுதி உள்ளவர்கள் இல்லையென ஆளும் கட்சியினர் கூறியதாக கேள்விப்பட்டோம். அமைச்சரவையில் பிரதி சபாநாயகர் வைத்தியர் றிஸ்வி சாலியை நியமியுங்கள் அல்லது பிரதி அமைச்சர் ஒருவரை நியமியுங்கள் என்று எமது சமூகம் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் பெயர்ப் பட்டியலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றவூப் ஹக்கிம் கோரிக்கை விடுத்த போதும் இதுவரையும் எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் பெயர்ப்பட்டியலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏன் ஆளும் கட்சியினர் தயக்கம் காட்டுகின்றனர் என்பது புரியாமல் உள்ளது. எனவே கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களின் விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

க்ளீன் சிறீலங்கா திட்டம் பற்றி பேசும் நாம் எமது உள்ளங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.



உள்ளத்தில் வேறு ஒன்றை நினைத்துக்கொண்டு செயற்பட முடியாது. இலங்கை முஸ்லிம்கள் எமது நாட்டின் சுதந்திரத்திற்கும், ஐக்கியத்திற்கும் பாரிய பங்களிப்புகளை வழங்கியதுடன், தீவிரவாதத்தை ஒருபோதும் ஆதரவளிக்கவில்லை என்ற உண்மையை இச்சபையில் வெளிப்படையாகவே தெரிவித்துக்கொள்கின்றேன்.

சவூதி அரசாங்கத்தால் அம்பாறை மாவட்டத்தில்(நுரைச்சோலை) 1000 கோடி ரூபா நிதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டம் இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படாமல் உள்ளது. 20 வருடங்களாக சுனாமியால் பாதிக்கப்பட்ட அக்கறைப்பற்று பிரதேச மக்கள் வீடுகளின்றி சிரமப்படுகின்றனர். அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களை சந்தித்த சவூதி அரேபியா நாட்டின் தூதுவர் இவ்வீட்டுத்திட்டத்தை மக்களிடம் கையளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடமும் சவூதி தூதுவர் வீடுகளை மக்களிடம் கையளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே அக்கறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வாழும் சனத் தொகைக்கு ஏற்ப இவ்வீடுகளை மக்களுக்கு கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.



# 75 வருட வரலாற்றில் மிகவும் பின்தங்கிய மல்லிகைத்தீவில் இரு மாணவிகள் அபாரம்

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



(சகா தேவராஜா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட 75 வருடகால மல்லிகைத்தீவு அ.த.க. பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவிகள் சித்தி அடைந்துள்ளார்கள்.

மல்லிகைத்தீவு அ.த.க.பாடசாலையின் அதிபர் எஸ்.ஜதீஸ்வரா இத்தகவலை உறுதிப்படுத்தினார்.

உருத்திரமூர்த்தி சபிக்ஷனா என்ற மாணவி 144 புள்ளிகளையும், ராஜு சஞ்ஷனா என்ற மாணவி 146 புள்ளிகளையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர் .

அதிபர் ஜதீஸ்வரா கருத்துத் தெரிவிக்கையில் -

பாடசாலையின் 75 வருட கால வரலாற்றில் முதல் தடவையாக இந்த இரண்டு மாணவிகள் சித்தி அடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர் . போக்குவரத்து வசதி ரியூசன் வசதி இல்லாத இப் பகுதியில் படைத்த இச் சாதனை எமக்கு பெருமையை தேடித் தந்துள்ளது. இவர்களை உருத்திரமூர்த்தி ஆசிரியர் கற்பித்தார்.

மாணவர்கள் பெற்றோர்கள் உதவிய ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றார்.

# இன்று கல்முனையில் குருதிக்கொடை நிகழ்வு

(சகா தேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று (சனிக்கிழமை) மாபெரும் இரத்ததான முகாம்( குருதிக்கொடை) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து இன்று காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை பாடசாலை வளாகத்தில் இடம்பெறும்.

இந்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்குமாறு கார்மேல் பற்றிமாவின் 125 ஆவது நிறைவு நிகழ்வு நிறைவேற்றுக்குழு அழைக்கின்றனர்.

125 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் பல நிகழ்வுகள் ஒரு வருடத்திற்கு மாதாந்தம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நாவிதன்வெளி அல்-ஹிரா மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை கல்வி வலயத்தின் நாவிதன்வெளி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலையான கமு/சது/ அல்-ஹிரா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் எம்.ஆர். அப்துல் பாஸித் 152 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்தியுள்ளார்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகத்திற்கு பொதுமக்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் மேலும் வழிப்படுத்திய அதிபர் ஏ.எல் சனூஸ் மற்றும் தரம் 5 வகுப்பாசிரியர் ரி. விஜயதாஸ் உட்பட அனைத்து ஆசிரியர்களுக்கும் பெற்றோர் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2025இல் வெளியிடப்பெற்றது